**கவனிக்க** .- 2026.08.28 ஆந் திகதிய 2504 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2505- 2026 සැප්තැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2026.09.04

2505 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 3122 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 3122 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 3123 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026,செத்தெம்பர் மாதம் 25ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, செத்தெம்பர் மாதம்11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - கிண்ணியா**
**வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2026.09.10**

கிண்ணியா, சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான வழக்குச் சான்றுப் பொருளான மணல் 2026.09.10 ஆந் திகதியன்று மாலை 2.30 மணிக்கு கிண்ணியா , பொலிஸ் நிலைய , கந்தல்காடு பிரிவுக்குட்பட்ட வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்

1.இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருந்தால் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.

02. பொது மக்கள் இந்நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏலவிற்பனை தொடங்குவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

03. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏல விற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப் பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

04. இவ்வழக்குச் சான்றுப் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினைச் செலுத்தி அதனை நீதிமன்றத்தினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வளாகத்திலிருந்து அப்புறப்படுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குபவர்கள் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையினை கொண்டு வருதல் வேண்டும்.

எம்.எஸ்.எம்.சம்சுதீன்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை,
2026.08.24.

**நீதிவான் நீதிமன்றம் - கிண்ணியா**

| *தொ.இல.* | *ஏலமிடப்படும் திகதி* | *ஏலமிடப்படும் பொருட்கள்* | *அளவு* | *ஏலமிடப்படும் இடங்கள்* |
|---|---|---|---|---|
| 01 | 2026.09.10 | மணல் | 420 கியூப் | கந்தல்காடு பிரிவு, (கிண்ணியா பொலிஸ் நிலையம்) |

09 - 18

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

*நிறுவனத்தின் முன்னையபெயர்:* சி.எச். றொபின்சன் வேர்ல்ட்வைட் ப்ரைட் லங்கா (பிரைவேட்) லிமிடெட்
*பதிவு இலக்கம் :* PV 00234714
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல.347/1, காலநிநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, கொழும்பு 02

*நிறுவனத்தின் புதிய பெயர் :* றொபின்சன் லொஜிஸ்டிக்ஸ் லங்கா ( பிரைவேட்) லிமிடெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மெக்லரன்ஸ் குரூப் மேனேஜ்மென்ட் லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்.

09 - 19

## அறிவித்தல்

2026, ஓகத்து 3 ஆம் திகதியில் இருந்து செயல்படும் வகையில் சொப்ட்லொஜிக் இன்ஸ்டிடியுட் ஒப் மெனேஜ்மன்ட் அன்ட் டெக்னோலஜி ( பிறைவட்) லிமிடெட் தனது பெயரை சொப்ட்லொஜிக் மெட்ரோபொலிடன் கெம்பஸ் ( பிறைவட்) லிமிடெட் என மாற்றியுள்ளது என்பதை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கு அமைய இத்தால் அறியத்தரப்படுகிறது.

*நிறுவனத்தின் பழையபெயர்:* சொப்ட்லொஜிக் இன்ஸ்டிடியுட் ஒப் மெனேஜ்மன்ட் அன்ட் டெக்னோலஜி ( பிறைவட்) லிமிடெட்
*பதிவு இலக்கம் :* PV 00327854
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல.181, கிருள வீதி, கொழும்பு 05
*நிறுவனத்தின் புதிய பெயர் :* சொப்ட்லொஜிக் மெட்ரோபொலிடன் கெம்பஸ் ( பிறைவட்) லிமிடெட்

சொப்ட்லொஜிக் கோர்பரேட் சேர்விசஸ் ( பிறைவட்) லிமிடெட்
செயலாளர்கள்.

இல.14, டி பொன்சேகா பிளேஸ்,
கொழும்பு 05.

09 - 12

---

## EZY டிஸ்ரிபியுசன் ( பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. - PV 7277

கலைப்பு நடவடிக்கைகள் செல்லாது என அறிவிக்கும் உத்தரவு

*கம்பனியின் பெயர் :* EZY டிஸ்ரிபியுசன் ( பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 17, சமகி மாவத்தை, பொருபன வீதி, இரத்மலானை
*நீதிமன்றம் :* வர்த்தக உயர் நீதி மன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல. :* 73/ 2021/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர் :* Gerard jeevananthan David
*முகவரி :* Level 3, No.11, Castle Lane, Colombo 04 (Presently at Level 1, No.100, Braybrooke place, Colombo 02)
*கலைப்பு நடவடிக்கைகளின் செல்லாது என அறிவிக்கும் உத்தரவு :* 2026.06.30

09 - 13

---

## அளிப்பவர் நியமன அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழ் ஆசிய பேரழிவு தயார்நிலை மைய அறக்கட்டளை (GA3270)
(கடன் கொடுத்தோரின் விருப்பமான கலைப்பு)

2026, ஓகத்து14 அன்று நடைபெற்ற மேற்கூறிய நிறுவனத்தின் கடன் கொடுத்தோர் கூட்டத்தில் இல. 653, இயக்கடுவ, ஜா-எல என்ற முகவரியைச் சேர்ந்த சாட்டர்ட் கணக்காளர் திரு. தரிந்து சந்தருவன் கல்கிஸ்ஸ அவர்கள் இல. 4-101 & 4-102, தொகுதி 4, BMICH,பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ள ஆசிய பேரழிவு தயார்நிலை மைய அறக்கட்டளையின் அளிப்பாளராக (Liquidator) நியமிக்கப்பட்டுள்ளார்.

ரி எஸ் கல்கிஸ்ஸ,
அளிப்பவர் (Liquidator).

09 - 33

---

# ஏல விற்பனைகள்

## அறிவித்தல்

### திருத்தம்

### டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

2026, ஓகத்து மாதம் 14ஆந் திகதியிட்ட 2,502 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி: II (ஆ) தொகுதியில் 8-175 ஆம் இலக்கம் கொண்ட DFCC வங்கியினால் சத்மூத்தரா ஆராச்சிகே பத்மசிரி குமார என்பவரின் பெயரில் வெளியிடப்பட்ட ஏல விற்பனை அறிவித்தலில், நிலத்தின் அளவு தவறுதலாக "1 றூட்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும் . அது "1 ஏக்கர் " எனத் திருத்தப்பட வேண்டும் என இதனால் அறியத்தருகிறோம்.

N.U. ஜயசூரிய.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
மாவில்மட, கண்டி.

09 - 28

---

## இலங்கை வங்கி ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் / மேலதிகப்பற்று தொடர்பு இலக்கம் - 92568837, 94099619, 94198349, 94347018

இல. 14-2/1A , மாதங்கஹவத்தை ஒழுங்கை, வெள்ளவத்தை. கொழும்பு 06 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி பவானி பாஸ்கரன் என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த

தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.07.31 ஆந் திகதியிட்ட 2500 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.08.06 ஆந் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனையையும் இல. 24, ரொறிங்ரன் வீதி, கண்டி என்ற முகவரியிலுள்ள ஷொன்மள் & சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. N. சமரவிக்ரம அவர்கள் 2026.09.29ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை

பின்னொருவத்தை மற்றும் மாதங்கஹவத்தை' (தொகுதி 17 பக்கம் 33 (சேதமடைந்துள்ளது) /தொகுதி 55 பக்கம் 15இல் (இறுதி) பதிவு வரைபட இல. 1இல் காணித்துண்டு 8இன் உட்பிரிவு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் C. ஜீரசிங்க தயாரித்த 2008.02.28. ஆம் திகதிய வரைபட இல. 2420இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5214 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல.3A. வைத்தியா பிளேஸ் எனும் வரிமதிப்பீட்டு முகவரியுடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று தெஹிவளை - கல்கிசை மாநகர சபை மற்றும் தெஹிவளை பிரதேச செயலக எல்லைகளுக்குட்பட்ட 540, தெஹிவளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள தெஹிவளை கிழக்கு 9 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளது. வடக்கு: தனியார் வீதி - காணித்துண்டு 148 B2; கிழக்கு: இக்காணியின் துண்டு 5216 (10 அடிப் பாதைக்கான ஒதுக்கம்); தெற்கு: இதே காணியின் துண்டு 5215; மேற்கு: காணித்துண்டு 785 (வரி மதிப்பீட்டு இல. 99/6, காலி வீதி) என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஏழு தசம் எட்டு பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே7.8) அல்லது 0.0197 ஹெக்டேயர் பரப்பளையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மண், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு தெல்கந்த - நுகேகொட காணிப் பதிவகத்தில் Dehi 103/49, 50 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காணித்துண்டானது உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. கனகசிங்கம் தயாரித்த 2016.10.25 ஆம் திகதியிட்ட அண்மைய வரைபட இலக்கம் 4884இல் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

'பின்னொருவத்தை மற்றும் மாதங்கஹவத்தை' என அழைக்கப்படும் காணியின் வரைபட இல. 4884இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமானகாணி இல.3A.வைத்தியா பிளேஸ் எனும் வரிமதிப்பீட்டு முகவரியுடன் தெஹிவளை கிழக்கு 9 ஆம் வட்டாரத்தில் வைத்தியா பிளேஸ் புற வீதியொன்றில் அமைந்துள்ளது. வடக்கு: காணித்துண்டு 148 B2 (தனியார் வீதி); கிழக்கு: காணித்துண்டு 5216 (3.5 மீற்றர் (10 அடி அகலம்) பாதைக்கான ஒதுக்கம்); தெற்கு: இல.3A, வைத்தியா பிளேஸ் எனும் வரிமதிப்பீட்டு முகவரியைக்கொண்ட காணித்துண்டு 5215. மேற்கு: 99/6, தெஹிவளை வீதி எனும் வரிமதிப்பீட்டு முகவரியைக்கொண்ட காணித்துண்டு இல. 785 என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஏழு தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 7.10பே) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மண், மரங்கள். பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு தெல்கந்த - நுகேகொட காணிப் பதிவகத்தில் Dehi 148/35, 36 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை

'பின்னொருவத்தை மற்றும் மாதங்கஹவத்தை' என அழைக்கப்படும் காணியின் வரைபட இல. 2420இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5216 (10அடி அகல பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி தெஹிவளை கிழக்கு 9 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளது. வடக்கு: தனியார் வீதி - காணித்துண்டு 148 B2; கிழக்கு: வைத்தியா பிளேஸ் (காணித்துண்டு 13) மற்றும் காணித்துண்டு 11 (வரி மதிப்பீட்டு இல. 1. வைத்தியா பிளேஸ்); தெற்கு: இதே காணியின் துண்டு 5215; மேற்கு: இதே காணியின் துண்டு 5214 என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒன்று தசம் நான்கு பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 1.4பே) அல்லது 0.0036 ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த -நுகேகொட காணிப் பதிவகத்தில் Dehi 135/99- 100 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"பின்னொருவத்தை மற்றும் மாதங்கஹவத்தை" (வரைபடம் 1 இல் உள்ள காணித்துண்டுகள் 159/A, 159B, 167C, 167D மற்றும் 168 ஆகியவற்றின் உபபிரிவாகவும் வீதிக்கான ஒதுக்கமாகவும் இருக்கும்) என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் H. டொன் டேவிட் தயாரித்த 1936.07.13. ஆம் திகதிய வரைபட இல. 2409இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 13 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேலே விவரிக்கப்பட்ட 5214 ஆம் இலக்கக் காணியைப் பயன்படுத்துவது மற்றும் அனுபவிப்பதுடன் தொடர்புடைய அனைத்து நோக்கங்களுக்காகவும், பொதி ஏற்றப்பட்ட மற்றும் ஏற்றப்படாத குதிரைகள், கால்நடைகள், வண்டிகள், மாட்டு வண்டிகள் மற்றும் இதர வாகனங்களுடன் அல்லது அவை இல்லாமலும், அதன் மீதும் நெடுகிலும் சென்று வருவதற்குரிய முழுமையான இலவச, நேரடியான சுதந்திரம் மற்றும் உரிமைகளுடன் தெஹிவளை கிழக்கு 9 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளது. வடக்கு: காணித்துண்டுகள் 5, 7, மற்றும் 1488; கிழக்கு: காணித்துண்டுகள் 134 மற்றும் 6; தெற்கு: வைத்தியா வீதி மற்றும் காணித்துண்டுகள் 6 மற்றும் 11 ; மேற்கு: காணித்துண்டுகள் 8, 10,11 மற்றும்

12 என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி இருபத்திரெண்டு தசம் ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 22.5பே.) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த நுகேகொட காணிப் பதிவகத்தில் Dehi 133/35 - 36 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணம் செலுத்தும் முறை** : ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்:

1. கொள்வனவு விலையில் 10% ( பத்து வீதம்) ;
2. பெறுமதிசேர் வரி (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5 % ( இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% ( பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும் .

மேலும் விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வானவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து, ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்கு சென்றடையும் வழி**: தெஹிவளைச் சந்தியிலிருந்து கொழும்பு நோக்கி சுமார் 500 மீற்றர் பயணித்து, வலதுபுறமாக வைத்யா வீதியில் திரும்பி சுமார் 100 மீற்றர் தூரம் செல்லவும். பின்னர் இடதுபுறமாக வைத்யா பிரதேசத்திற்குள் திரும்பி சில மீற்றர் தூரம் பயணித்தால் வலதுபுறத்தில் அமைந்துள்ள குறித்த ஆதனத்தை அடையலாம்.

ஏல விலை கூறுபவர்கள் மேற்குறிப்பிட்ட ஆதனம் தொடர்பான உரித்துறுதியையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் இலங்கை வங்கி பம்பலப்பிட்டிக் கிளையின் பிரதான முகாமையாளரை தொடர்பு கொள்வதனூடாகப் பார்வையிட முடியும்.

தொலைபேசி இலக்கம் : 011-2583330.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி AGRA தர்மசேன,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பம்பலப்பிட்டி கிளை.

09 - 36

## இலங்கை வணிக வங்கி பி எல் சி - கிருளப்பனை கிளை

### பொது ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

ஈடு வைத்தோர் என்ற வகையில் நொத்தாரிசு எம்.எஸ். பி.பீரிஸ் என்பவரினால் 2018, பெப்புருவரி 23 ஆந் திகதியிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுப்பத்திர இல. 696 மற்றும் 2018, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுப்பத்திர இல. 971, கடன்பட்டவர்களான இல. 9/6, சிட்டி ஹோம், வனவாசல வீதி அவரிவத்த, வத்தளையைச் சேர்ந்த பெரியண்ணன் தயாபரன் மற்றும் சிவராஜா சிறீராம் என்பவர்களினதும் மற்றும் இல. 577/8, ரணமுத்துகல, கடவத்தையைச் சேர்ந்த சுபசிங்க அப்புஹாமிலாஹே பிரசன்னா பிரதீப் என்பவரினதும் வியாபார பங்குடமையாளருக்காக "வீனஸ் ட்ரேடஸ்" என்ற பெயர் கொண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக இலங்கை வணிக வங்கி பிஎல்சீ க்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன கோரள அதிகாரி பத்து மகர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மகர பிரதேச செயலாளர் பிரிவில் ரண்முத்துகல 287/A , கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ரண்முத்துகல கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் "பிலவேவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் வி.ஜி. விதான என்பவரினால் 2017.11.23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 1305/ 2017 துண்டு X சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டு வடக்கே: வீதியையும் மற்றும் நிலவரைபட இல. 1876 இல் துண்டு 06; கிழக்கே: அதே காணியில் ஒரு பகுதியும்; தெற்கில்: ஆறு மற்றும்; மேற்கில் : அனுமதிபெற்ற நில அளவையாளாரினால் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 3578 Aஇல் துண்டு 01 மற்றும் வீதியும் எல்லையாக கொண்டுள்ளதுடன் பதினெட்டு தசம் ஒன்பது சைபர் பேர்ச் (0ஏ.0றூ.18.90பே.) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 1305/ 2017 துண்டு X கொண்டுள்ளதுடன் கம்பஹா பதிவு அலுவலகத்தில் தலைப்பு/ பரிமாணம் M 585/ 92 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

அத்துடன் அனுமதிபெற்ற நில அளவையாளர் ஏ. விக்கிரமசிங்க என்பவரினால் 1985.04.08 இல் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 1876 துண்டு 13, துண்டு 14 மற்றும் துண்டு 15 இல் வீதி விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி சிலோன் பிஎல்சி யினால் எனக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் மேலே விபரிக்கப் பட்டுள்ள சொத்து அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் 2026, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** கடவத்த போதி சந்தியிலிருந்து கொழும்பு- கண்டி வீதி மார்க்கமாக கண்டியை நோக்கி சுமார் 3.35 கி.மீ. தூரம் சென்று வலது பக்கமாக திரும்பி ( AG அலுவலக வளாகத்தின் எதிர்ப்பக்கத்தில்) 175 மீற்றர் தூரம் வரை சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் இடது கை பக்கத்தில் இறுதியின் சுற்றுவட்டத்தின் முன் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2023.11.10ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2023.11.02ஆந் திகதிய "டெய்லி மிரர்", "லங்காதீப" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்துதல் வேண்டும்:

01. கொள்வனவு விலையின் பத்து வீதம் (10% );
02. உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (1%);
03.ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2% ) ;
04.விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 3,000.00;
05. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூ. 3,000.00;
06.விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு;
07. கொள்வனவு விலையின் மிகுதி 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடின் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

மேலதிக விபரங்களுக்கு .- "முகாமையாளர் - இலங்கை வணிக வங்கி PLC, , இல.98, ஹைலெவல் வீதி, கிருளப்பன" என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. 011-2514321, 011- 2514322.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச் செய்யவும் / இடைநிறுத்தவும் முடியும்".

எம்.எச்.டி. கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3,
விஹார மாவத்தை,
கொலன்னாவ.

தொலைபேசி இல.: 011-3068185, 2572940.

09 - 17

---

**டீ.எப்.சீ.சீ. வங்கி பி.எல்.சீ.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

ஈடுவைத்தோர் என்ற வகையில் நொத்தாரிசு றுவந்தி பொன்சேகா என்பவரினால் 2017.11.15 ஆந் திகதியிட்ட நாட்புத்தக இல. 7/ 824 மற்றும் 2019.06.27 ஆந் திகதியிடப்பட்ட நாட்புத்தக இல. 7/ 603 இற்கு தொடர்புடைய அத்தாட்சிப்பத்திர இல. 00070007406 மற்றும் 2017.10.04 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுப்பத்திர இல. 1355 கொழும்பு பதிவு அலுவலகத்தில் பதியப்பட்ட பதிவு இல. PV104379 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு கம்பனி சட்டத்திற்கு அமைய முறையாக இணைக்கப்பட்ட நிறுவனமான இன்டீட் பெக்கிங் சொலுஷன் ( பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக டீ எவ் சீ சீ வங்கி பீஎல்சீ க்கு ஈடு வைக்கப்பட்டு திரும்பச் செலுத்தத் தவறிய சொத்து.

1 ஆம் விற்பனை

| *Province* | *Western* |
|---|---|
| District | Gampaha |
| Divisional Secretary's Division | Attanagalla |
| Grama Niladari Division | Wedagama |
| Village | Wedagama |
| Cadastral Map No. | 510602 |
| Block No. | 05 |
| Land Parcel No. | 0168 |
| Extent | 0.2024 (Hectare) |

மேல் விபரிக்கப்பட்டுள்ள சொத்தை 2026, செத்தெம்பர் மாதம் 28ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**செல்லும் வழி:**நிட்டம்புவவிலிருந்து கண்டி வீதி மார்க்கமாக சுமார் 2.3 கி.மீ.தூரம் உள்ள வெதகம, ரணவிரு சம்பத் மாவத்தையில் டம்ரோ கட்டடத்தை கடந்து செல்கையில் இடது பக்கமாக உள்ள வீதியால் சுமார் 125 கி.மீ. தூரம் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

2 ஆம் ஏல விற்பனை

ஆலையில் அசையும் இயந்திரங்கள் மற்றும் உபகரணம் உள்ளடங்கலாக

| *Machinary/ Movable Existing* | *Make* | *Model* | *Serial No.* | *Year of Manufacture* |
|---|---|---|---|---|
| Machine I | BOPP | 1350mm Coating Machine | | 2015 |
| Machine II | HUATIAN JINGGONG | CF500DK | 1201200001 | 2012 |
| Machine Ill | WEB TECK | Computer form Collector | | 2014 |
| Machine IV | BOPP | Slitting Machine | | 2015 |
| Machine V | STRECH | Film Re-winding Machine | | 2015 |
| Machine VI | SLT-RG2800 | 2 Colour Flexographic Machine | | 2017 |
| Machine VII | One unit of SL-M Four Winding Head Paper Tube Making Machine | | | |
| Machine VIII | One unit of SLT-SG1500 Film and Paper Slitting Rewinding Machine | | | |

அத்துடன் நாரம்மால பிரதேசசபை எல்லைக்குட்பட்ட நாரம்மால பிரதேச செயலாளர் பிரிவில் 1034- மரடகொல்ல கிராம அலுவலர் பிரிவில் இல. 02 மரடஹெல்லவத்த, பரணகம கிரியுள்ள வளாகத்தில் தற்போது வைப்பிலுள்ள உதிரிப்பாகங்கள், துணைக்கருவிகள் உள்ள களஞ்சியசாலையில் அசையும் எல்லா சொத்துக்கள் அடமானம் வைத்தவர் சென்று வரவும் களஞ்சியசாலையில் உள்ள மற்றும் வளாகத்தில் உள்ள உபகரணங்கள் அனைத்தும் நேரத்திற்கு நேரம் நடைபெறும் வர்த்தகங்கள் மற்றும் மேற்கூறப்பட்ட வியாபார உபகரணங்கள் இயந்திரங்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்காக இடத்திற்கு இடம் கொண்டு செல்லப்படும் உதிரிப்பாகங்கள் தரம் இருப்பில் இடப்பட்ட அசையும் இயந்திரம் தற்போது களஞ்சியத்திற்கு வந்து சேரும் உபகரணங்கள் இடத்துக்கு இடம் கொண்டு செல்லும் பொருட்கள் அசையும் பொருட்கள் நேரத்திற்கு நேரம் களஞ்சியத்தில் வைக்கப்படும் எல்லா சொத்துக்களும் உதிரிப்பாகங்கள் அகற்றும் அல்லது கொண்டு செல்லும் வியாபாரப் பொருட்களின் விபரங்கள் வேலை நடந்து கொண்டிருக்கும் அசையும் உபகரணங்கள் நாளுக்கு நாள் இடத்திற்கு இடம் வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்படும் கொண்டு செல்லப்படும் விபரங்கள் எல்லாவற்றின் உரிமை அடங்குகிறது.

மேல் விபரிக்கப்பட்டுள்ள சொத்தை 2026, செத்தெம்பர் மாதம் 28ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

செல்லும் வழி: இல. 02, மரடஹொல்லவத்த, பரணகம கிரியுள்ள.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு:**2026.08.14 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2026.08.07 ஆந் திகதிய டெய்லி திவயின, த ஐலன்ட் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்:** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்துதல் வேண்டும்:

1. கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
2. உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம்(1%);
3. ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);

4.விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 3,000.00;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 2,000.00;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு;
7. கொள்வனவு விலையின் மிகுதி தொண்ணூறா வீதம் (90%) மற்றும் இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட சட்டபூர்வமான கட்டணங்கள் , கடமைகள், வரிகள் அல்லது கட்டணங்கள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.
மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

மேலும் விபரங்களுக்கு தயவு செய்து மறுவாழ்வு மீட்பு துறையுடன் தொடர்பு கொள்க. DFCC வங்கி PLC , இல.73, டபிள்யூ ஏ.டீ ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொ.பே. 011-2371371.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்".

துசித் கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் ஒக்சன்ஸ்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.

தொலைபேசி இல.: 0113068185, 2572940.

09 - 16

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

சுப்ளோ பொரொப்பார்ட்டி இண்வெஸ்மண்ட் குரூப் ( பிரைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல. 0117 1000 3345

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2023.10.26ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.12.08ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் ( Gazette) 2023.12.08 ஆந் திகதிய திவயின (Divaina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே மூன்று இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி மூன்று ரூபா மூன்று சதம் (ரூபா 10,352,993.03) 2023, ஒற்றோபர் 06 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை தொண்ணூற்றி ஐந்து இலட்சத்து ஒன்பதினாயிரத்து முந்நூற்று எழுபத்தி ஒன்பது ரூபா ஒன்பது சதம் (ரூபா 9,509,379.09) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 122 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2026.10.13ஆந் திகதி மு.ப. 11.00 முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

வட மேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் தித்தவெலிகந்தாஹெ கோரளே ஹிரியால ஹத் பத்துவின் இப்பாகமுவ பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் கணேவத்த பிரதேச செயலாளர் பிரிவின் தித்தவெல்கால இல. 433 கிராம அலுவலர் பிரிவின் தித்தவெல்கால இல் அமைந்த "மஹாயாயகனேவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. எஸ். எம். எம். பாந்தெனிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, ஏப்பிறல் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 1250 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 6 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: லொட் 3; கிழக்கு: லொட் இலக்கங்கள் 3, 5 மற்றும் கல்; தெற்கு: கல், வீதி மற்றும் அரசுக்கு சொந்தமான இஹல வெவ மற்றும் மேற்கு: அரசுக்கு சொந்தமான இஹல வெவ மற்றும் நில மானியங்களின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அப்புறப்படுத்தப்பட்ட காணிகள், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினான்கு ஏக்கர் இரண்டு றூட் மற்றும் இருபத்தி எட்டு பேர்ச் (14ஏ. 02றூ. 28பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண்

அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1250 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் P 51/111 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09 - 23

---

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன்வசதி தொடர்பு - 83850497 மற்றும் 83850680

இல.47. பஸார் வீதி, சிலாபம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அப்துல் ஹமீட் மொஹமட் ஹஸ்மர் என அறியப்படும் அல்ஹாஜ் அப்துல் ஹமீட் மொஹமட் ஹஸ்மர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.04.28 ஆந் திகதியிட்ட 2330 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.05.09ஆந் திகதி வியாழக்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள முதலாவது ஆதனத்தை 2026.09.23 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கும் இரண்டாவது ஆதனத்தை மு.ப. 11.30 மணிக்கும் இலவிஹார, 3/50, கொலன்னாவ மாவத்தை எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏலதாரர் திரு.MHT கருணாரத்ன அவர்கள் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. 'ஹலபக்ககே கல" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஶ்ரீதரன் தயாரித்த 2012.01.23 ஆந் திகதிய 5112 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆனைவிழுந்தான் பற்று பிட்டிகல கோரளை வடக்கு சிலாபம் நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட பிட்டிப்பன தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பஸார் வீதியில் அமைந்துள்ளது - வடக்கு : பஸார் வீதியையும் ; கிழக்கு : 45B என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட பிறைற் சிற்றியையும்; தெற்கு : தமியா ரிம்பர் டிப்போவையும்; மேற்கு: சிலாவ் ஷூ பலஸையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன் கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஐந்து தசம் இரண்டு ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.5.25பே.) பரப்பளவைக் கொண்டுள்ளது. இக்காணியானது சிலாபம் காணிப் பதிவகத்தில் பக்கம் D 162/211 இல் உள்ள குறிப்புரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

5112 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணித்துண்டு 1 கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

'ஹலபக்ககே கல" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஶ்ரீதரன் தயாரித்த 1997.04.19 ஆந் திகதிய 117 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆனைவிழுந்தான் பற்று பிட்டிகல கோரளை வடக்கு சிலாபம் நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குட்பட்ட பிட்டிப்பன தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பஸார் வீதியில் அமைந்துள்ளது - வடக்கு : பஸார் வீதியையும்; கிழக்கு : கோல்ட் வோச்சையும்; தெற்கு : தமியா ரிம்பர் டிப்போவையும்; மேற்கு: கணேஷன் மில்லையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன் கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஐந்து தசம் இரண்டு ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.5.25பே.) பரப்பளவைக் கொண்டுள்ளது. இக்காணியானது சிலாபம் காணிப் பதிவகத்தில் பக்கம் D 59/114 இல் உள்ள குறிப்புரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

117 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணித்துண்டு B கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும் :

'ஹலபக்ககே கல" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எம். பெரேரா தயாரித்த 1947.04.26 ஆந் திகதிய 3025 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆனைவிழுந்தான் பற்று பிட்டிகல கோரளை வடக்கு சிலாபம் நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குட்பட்ட பிட்டிப்பன தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பஸார் வீதியில் அமைந்துள்ளது - வடக்கு : பஸார் வீதியையும்; கிழக்கு மற்றும்; தெற்கு: தற்போது வியாபாரிகளுக்குச் சொந்தமாகவுள்ள இதே காணியின் பாகத்தையும்; மேற்கு: குறித்த 3025 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன் கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.5பே.) பரப்பளவைக் கொண்டுள்ளது.

இக்காணியானது சிலாபம் காணிப் பதிவகத்தில் பக்கம் D 59/114 இல் உள்ள குறிப்புரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3025 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணித்துண்டு B கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும் :

'ஹலபக்ககே கல - பிரிக்கப்பட்ட கிழக்கு 1/ 2 பங்கு" என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆனைவிழுந்தான் பற்று பிட்டிகல கோரளை வடக்கு சிலாபம் நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குட்பட்ட பிட்டிப்பன தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பஸார் வீதியில் அமைந்துள்ளது - வடக்கு : பஸார் வீதியையும்; கிழக்கு: பாதைக்கான ஒதுக்கத்தையும் ; தெற்கு : பாதைக்கான ஒதுக்கத்தையும் ; மேற்கு: பி. அபுபசார் மற்றும் பிறரின் அதே காணியின் மீதமுள்ள பாகத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.5பே.) பரப்பளவைக் கொண்டுள்ளது. இக்காணியானது சிலாபம் காணிப் பதிவகத்தில் பக்கம் D 59/114 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள பின்னர் A 17/ 125 இற்கு மாற்றப்பட்டது.

2. 'தேக்ககஹாவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டன்ஸ்ரன் பெரேரா தயாரித்த 2013.06.24 ஆந் திகதிய 7814 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆனைவிழுந்தான் பற்று பிட்டிகல கோரளை வடக்கு சிலாபம் நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குட்பட்ட ஈச்சம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஈச்சம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த இக்காணியானது - வடக்கு : 818 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 69 மற்றும் 68 என்பவற்றையும் ; கிழக்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் என். எஸ். எல். பெனான்டோ தயாரித்த 1969.02.19 ஆந் திகதிய 886 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 29 ஐயும் ; தெற்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் என். எஸ். எல். பெனான்டோ தயாரித்த 1969.02.19 ஆந் திகதிய 886 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளதும் 20 அடி அகலமுள்ள பொதுப் பாதையாக விளங்குவதுமான காணித்துண்டு 70 ஐயும் ; மேற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். எம். பி. டி. பெரேரா தயாரித்த 1781 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருபத்தொரு பேர்ச் (00ஏ.00றூ.21பே.) இன்னும் துல்லியமாகக் கூறின் இருபது தசம் ஆறு ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.20.65பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் என். எஸ். எல். பெனான்டோ தயாரித்து 1969.12.19 ஆந் திகதிய 886 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 70 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதையைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டுள்ளது இக் காணியானது, சிலாபம் காணிப் பதிவகத்தில் பக்கம் A 17/ 81 இல் உள்ள குறிப்புரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

7814 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணித்துண்டு 1 கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும் :

'தேக்ககஹாவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஶ்ரீதரன் தயாரித்த 2001.02.20 ஆந் திகதிய 960 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆனைவிழுந்தான் பற்று பிட்டிகல கோரளை வடக்கு சிலாபம் நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குட்பட்ட ஈச்சம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஈச்சம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த இக்காணியானது - வடக்கு : நில அளவையாளர் எம். எம். பி. டி. பெரேரா தயாரித்த 818 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 63, 68, 69 என்பவற்றையும்; கிழக்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் என். எஸ். எல். பெனான்டோ தயாரித்த 1969.02.19 ஆந் திகதிய 886 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 20 அடி அகலமுள்ள பொதுப் பாதையாக விளங்குவதுமான காணித்துண்டு 70 ஐயும்; மேற்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். எம். பி. டி. பெரேரா தயாரித்த 1781 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருபத்தொரு பேர்ச் (00ஏ.00றூ.21பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணியானது சிலாபம் காணிப் பதிவகத்தில் பக்கம் D 83/ 75 இல் உள்ள குறிப்புரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

960 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணித்துண்டு 1 கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும் :

'தேக்ககஹாவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் என். எஸ். எல். பெனான்டோ தயாரித்த 1969.02.19 ஆந் திகதிய 886 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 28 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆனைவிழுந்தான் பற்று பிட்டிகல கோரளை வடக்கு சிலாபம் நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குட்பட்ட ஈச்சம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஈச்சம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த இக்காணியானது - வடக்கு : அப்துல் ஹமீட் மரைக்காரின் காணியையும்; கிழக்கு: குறித்த வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 29 ஐயும் ; தெற்கு : 20 அடி அகலமுள்ள பொதுப் பாதை ஒதுக்கமாக விளங்கும் காணித்துண்டும் 70 ஐயும் ; மேற்கு: குறித்த வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 27 ஐயும்

எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருபத்திரெண்டு தசம் ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.22.5பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணியானது சிலாபம் காணிப் பதிவகத்தில் பக்கம் D 83/ 75 இல் பதிவுசெய்யப்பட்டு பின்னர் A 17/ 115 இற்கு மாற்றப்பட்டது.

"ஏல விலை கூறுபவர்கள் மேற்குறிப்பிட்ட ஆதனம் தொடர்பான உரித்துறுதியையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் இலங்கை வங்கி சிலாபம் கிளையின் முகாமையாளரை தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிட முடியும்.

தொலைபேசி இலக்கம் : 032-2222335.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. U.S.S. பெனான்டோ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
சிலாபம் கிளை.

09 - 35

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தின் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அட்டவணை 2026**

| *மாதம்* | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** .. | வெள்ளி | 04.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2026 |
| | வெள்ளி | 11.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2026 |
| | வெள்ளி | 18.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2026 |
| | வெள்ளி | 25.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2026 |
| **ஒற்றோபர்** .. | வெள்ளி | 02.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2026 |
| | வெள்ளி | 09.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2026 |
| | வெள்ளி | 16.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2026 |
| | வெள்ளி | 23.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2026 |
| | வெள்ளி | 30.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2026 |
| **நவெம்பர்** .. | வெள்ளி | 06.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2026 |
| | வெள்ளி | 13.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2026 |
| | வெள்ளி | 20.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2026 |
| | வெள்ளி | 27.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.